பக்கங்கள்:-20

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 07 | புதன்கிழமை | 19.02.2025 | அதிர்வு 201 |
|---|---|---|---|---|---|

## அரசுக்கு ஏற்றால் போல எம்மால் ஆட முடியாது!

### நாமல் எம்.பி. கூறுகின்றார்



“அநுர அரசுக்கு ஏற்றால் போல் அரசியல் செய்ய நாம் தயாரில்லை. 06

## இனப்பிரச்சினைக்கு சமஷ்டியே ஒரே தீர்வு

# அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!

### நாடாளுமன்றில் அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி. இடித்துரைப்பு

**“ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்பட்டது. ஆனால், தற்போது அது கிடப்பில் போடப்பட்டது. போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று குறிப்பிட்ட ஜே.ஆர்.ஜயவர்தன 1995ஆம் ஆண்டு மரணப்படுக்கையில் வடக்கு - கிழக்கு இன முரண்பாட்டுக்கு சமஷ்டி சிறந்த தீர்வு என்று குறிப்பிட்டார். ஆகவே, தற்போதைய அரசுக்குச் சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.** 07



# எதிரணிகளை முடக்கிவிட்டு தேர்தலுக்குச் செல்லாதீர்கள்

### பொருத்தமானதொரு நாளில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்று சஜித் அணியினர் வலியுறுத்து



எதிரணிகளை நாடாளுமன்றத்துக்குள் முடக்கிவைத்துவிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. வலியுறுத்தினார்.

எனவே, பாதீட்டு கூட்டத் தொடர், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, தமிழ், சிங்களப் புத்தாண்டு என்பன முடிந்த பின்னர் பொருத்தமானதொரு நாளில் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:- 07




‘தானம் கிடைத்த மாட்டை பல்லை பிடித்து பதம் பார்க்காதே!’ – என்பார்கள்.

பாவத்திற்கு இரங்கிக் கொடுக்கும் மாட்டை பல்லைப் பிடித்துத் தரம் பார்க்க கூடாது என்பது அதன் அர்த்தம்.

அதற்காக எந்தக் குப்பையை கொடுத்தாலும் பெற்றுச் செல்லும் மனநிலையிலும் மக்கள் இல்லை என்பதற்கு சீனாவின் இலவச அரிசி விநியோகம் நல்ல உதாரணம்.

2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வடக்கின் மீனவர்களிற்கு என சீனத் தூதரகத்தின் ஏற்பாட்டில் பெருந்தொகை அரிசி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அதற்கு தீர்வை விலக்கு வழங்கப்பட்டு, மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகங்கள் ஊடாக அதன் விநியோகம் இடம்பெற்றது.

அந்த அரிசியைப் பெற்றவர்கள் பல விமர்சனங்களையும் முன் வைத்தபோது சிலர் எதிர் மறையான கருத்துக்களையும் வைத்தனர். இக்காலத்தில் அரிசியை பெற்ற மீனவர்களோ 06



# ஆரோக்கியமற்ற நிலையில் காற்று

நாட்டின் சில பிரதேசங்களில் காற்றின் தரம் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மட்டத்தில் நிலவுவதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இரத்தினபுரி – கெடகன்கமுவ மற்றும் எல்பிட்டிய நகரில் காற்றின் தரம் சிறியளவு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மட்டத்தில் உள்ளதாக அந்த நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் காற்றின் தரம் நடுத்தர மட்டத்தில் நிலவுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஐ.எம்.எவ். நிறைவேற்று சபை 28 ஆம் திகதி கூடுகிறது

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான மூன்றாவது மீளாய்வு தொடர்பில் பரிசீலிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை எதிர்வரும் 28 ஆம் திகதி கூடவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் எதிர்வரும் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பணியாளர்கள் மட்ட இணக்கப்பாட்டை எட்டியது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை மூன்றாவது மீளாய்வைப் பரிசீலித்து அங்கீகரிக்குமாயின் இலங்கைக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நான்காவது தவணையாக மேலும் 333 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# வறட்சியான வானிலையால் நீர் விநியோகத்திற்குப் பாதிப்பு

நாட்டில் தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக, குடிநீரைச் சிக்கனமான பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கோரியுள்ளது.

வறண்ட காலநிலையினால் நீர் மூலங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வரும் அதேவேளை, அதிக வெப்பம் காரணமாக நுகர்வோரிடையே நீரின் பாவனையும் அதிகரித்துள்ளது.

எனவே, நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக, வாகனங்களைக் கழுவுதல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை என்பவற்றுக்கு நீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அத்தியாவசிய அன்றாட தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கோரியுள்ளது.

# மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்படாது: மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம்




மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்படாது என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் யு.எல். உதய குமார பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிப் பேசுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து சட்டவிரோத மதுபான நடவடிக்கைகளை ஒழிக்கவும், அரசாங்கத்திற்கான வருமானத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் கூறினார்.

இதேவேளை அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அவர் கூறுகையில், சம்பள அதிகரிப்பு காரணமாக அரச ஊழியர்கள் எதிர்காலத்தில் உத்வேகத்துடன் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.








# நோயாளர்களின் அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் காலத்தை குறைக்க நடவடிக்கை

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுகாதாரத் துறை தலைமையதிகாரிகளுக்கு இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அரச வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சைகளுக்காக அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் வரிசையில் காத்திருப்பதால், அந்த வரிசைகளைக் குறைக்க ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டது.

இந்தக் குழு ஒரு மாதத்திற்குள் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதற்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

இருதய, கண், சிறுவர் நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட ஏராளமான நோயாளர்கள் அரச வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வரிசையில் காத்திருக்கின்றனர்.

அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை சமாளிக்க ஜனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய துறைகள் மூலம் வழங்கக்கூடிய நிவாரணம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், அரசு வைத்தியசாலைகளில் அலுவலக நேரத்திற்குப் பிறகு அறுவை சிகிச்சைகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், வைத்தியர்கள் மற்றும் வைத்தியப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது








# இன்று அதிக வெப்பமான வானிலை நிலவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் இன்றும் அதிக வெப்பமான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வு கூறியுள்ளது.

அதற்கமைய, வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி மற்றும் மொனரா கலை மாவட்டங்களிலும் வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக் கூடும் என அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக, திறந்த வெளிகளில் பணிபுரிபவர்கள் போதியளவு நீரை அருந்த வேண்டும் எனவும் வீட்டில் உள்ள முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள் ளது.

அதேநேரம், சிறு குழந்தைகளை வாகனங்களில் தனியாக விட்டுச் செல்வதைத் தவிர்க்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

# முன்னாள் எம்.பியும் அவரது மகனும் கைது





புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர மற்றும் அவரது மகன் ஆகியோர் குற்றப் புல னாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட வாகனத்தை பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத் துக்கள் விசாரணைப் பிரிவின் விசாரணையைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பளையில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

கிளிநொச்சி, பளை – தம்பகாமம் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வீடொன்றில் இனந்தெரியாத நபர் களால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் திட்டமிட்டு பழிவாங் கும் நோக்கிலும், சொத்தழிவை ஏற்படுத்துவதற்காகவும் குறித்த பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலால் வீட்டின் பல பகுதிகள் தீக்கிரையாகி யுள்ளன.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'பிச்சை வேண்டாம், நாயை பிடியுங்கள்!' என்ற நிலையில் அந்த அரிசியை இலவச மாகவும் வேண்டாம் என ஏற்க மறுத்து விட்டனர். சில மாவட்ட அதிகாரிகள் அதனை ஒருவாறு கஷ்டப்பட்டவர்கள் தலையில் இலவச விநியோகம் எனக் கட்டி அடித்து விட்டனர்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தால் அதனை மீனவர்க ளிடம் செலுத்த முடியவில்லை. இதனால் 50 ஆயிரம் கிலோ அரிசியை மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைத்து, இதனை ஏனைய மக்களிற்கு இலவசமாக விநி யோகம் செய்யுமாறு கோரினர்.

மாவட்டச் செயலகம் அதனை நானாட் டான் மற்றும் மடுப் பிரதேசத்தில் வாழும் மக்களிற்கு வழங்க முன் வந்தது. அவர்களோ "ஏற்கனவே மீனவ மக்க ளிற்கு நீங்கள் இதனை வழங்கிய சம யம் அவர்கள் இந்த அரிசியை எமக்கும் வழங்கினர். அந்த அனுபவத்தின் பிரகா

வந்து சேர்வதற்கு அதில் பசைத்தன்மை இருப்பது அவசியம். அதனால் அவர் களது உற்பத்தி ரக அரிசியில் அமைலோ பெக்ரின் (Amylopectin) என்னும் மாப் பொருள் அதிகம் உள்ளது. அது தண்ணீ ருடன் சேர்ந்து விரைந்து பசை போன்ற தன்மையை ஏற்படுத்தும் இயல்புடை யது. ஆனால் நாங்கள் வழமையாக சோறுக்குப் பயன்படுத்தும் அரிசியில் அமிலோஸ் (Amylose) என்ற மாப் பொருள் இருக்கின்றது. அது இலகுவாக பசையாகக் கூடியது அல்ல."

"இந்தப் பசைப் பிடிப்புத் தன்மை இலங்கை மக்களுக்குப் பொருத்தமான அரிசி ரகம் அல்ல!" – என்று குறிப் பிட்ட ஐங்கரநேசன் அதற்கு அப்பால் மிக முக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். இது ஏற்கனவே அவர் தமது அமைப்பு மூலம் மக்களுக்கு தெளிவு படுத்திய விடயம்தான் என்றாலும் அதை மீள நினைவுபடுத்துவது முக்கியமானது.

"உலகில் அதிக அளவில் அரிசியை உற்பத்தி செய்யும் நாடாகவும் அதிக



**பழுதடைந்த அரிசியை நேற்றுப் பார்வையிடும் சுகாதாரப் பரிசோதகர்கள்.**

ரம் எமக்கு இந்த அரிசி வேண்டாம். குறைந்த பட்சம் கோழிக்குத் தீனாகப் போடவே பயமாகவுள்ளது" என்று கூறி ஏற்க மறுத்தனர் எனத் தெரிய வந்தது.

இதன் காரணமாக, இப்போது செம் மணதீவு களஞ்சியத்தில் தேங்கிக் கிடக் கும் அரிசி எலிகளிற்கு உணவாகின்றது. அதனை எவ்வாறேனும் விநியோகம் செய்திட வேண்டும் என்பதற்காக தற் போதும் உணவிற்கு பயன்படுத்த முடியுமா எனக் கண்டறிய நேற்றைய தினம் சுகா தாரப் பரிசோதகர்கள் மூலம் அது சோத னையிடபட்டது என்றும் தெரிகின்றது.

சுமார் ஏழாயிரம் கிலோ அரிசி இவ்வாறு தேங்கிக் கிடக்கின்றது. அதனை நேற்றுப் பார்வையிட்ட சுகாதாரப் பரிசோத கர்கள் அதனைக் கால்நடைத் தீவனமா கக் கூடப் பயன்படுத்தாமல் ஆழ வெட்டிப் புதைக்குமாறு அறிவுறுத்தல் கொடுத் திருக்கிறார்கள் எனப் பிந்தி கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

'சுண்டங்காய் கால்பணம், சுமைகூலி முக்கால் பணம்' என செலவு பாராமல் பண்டத்தை ஊர் கொண்டுவந்து சேர்த் தாலும் அது தரமற்றதானால் இவ்வாறு தான்போகும் என்பது இப்போது அனுப வப் பாடமாகியுள்ளது.

'சீனா தானமாக வழங்கிய அரிசி அடுப்பில் அவிக்க முதலே தண்ணீரில் நனைந்ததும் குழைந்து பசை போல மாறி விடுகிறது என மக்கள் சினக்கின் றார்களே...ஏன்?' – என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நிர்வாகி சூழலியலா ளர் நண்பர் ஐங்கரநேசனிடன் கேட்டேன்.

"சீனர்கள் குச்சி மூலம் தங்கள் உண வைக் கையாண்டு உண்பார்கள். அவர் கள் எங்களைப் போல் கையால் அள்ளி சோறு உண்பவர்கள் அல்லர். அவர்களது குச்சியில் சோறு ஒட்டிக்கொண்டு வாய்க்கு

அளவில் அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடாகவும் சீனாவே முதலிடத்தில் உள் ளது. ஆனால் அண்மைக்காலத்து ஆய் வுகளின் முடிவுகள் சீனாவின் அரிசி யில் சூழல் மாசு காரணமாக கட்மியம் அங்கீகரிக்கப்பட்ட அளவை விடவும் பன்மடங்கு அதிகமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உடலுக்கு அத்தியா வசியம் இல்லாத – ஆபத்தான – ஒரு பார உலோகம் இது. உணவின் மூலம் உடலினுள் நுழைந்து நீண்ட காலம் தேங்கி இருக்கக் கூடிய இக்கட்மியம் சிறுநீரகங்களைச் செயலிழக்க வைப்ப தோடு, மார்பு, நுரையீரல், சதயம், சிறு நீரகம் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலை யில் சீனாவில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் தரப் பரிசோதனை செய்யப்படாத அரிசியை நுகர்வது குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகும்" – என்று ஐங்கரநேசன் கூறுவதில் அர்த்தங்கள் அதிகம் உள்ளன என்று நினைக்கிறேன்.

\+ \+ \+

பிரதான எதிர்க்கட்சிகளின் பிரதி நிதிகள் நேற்று தேர்தல் ஆணையத்தில் ஆணையாளர்களைச் சந்தித்து தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வரும் வரவு – செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதம் மார்ச் 21ஆம் திகதி முடிவடை யும் வரையில் உள்ளூராட்சித் தேர்தலுக் கான வேட்பு மனு ஏற்றுக்கொள்ளும் அறிவித்தலை விடுக்க வேண்டாம் என்று நேரில் கோரினர்.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்கள் வரவு – செலவுத் திட்ட விவா தங்களில் முக்கியமாக கலந்து கொண் டிருக்கும்போது தேர்தல் வேட்பு மனு தயா ரிப்பு ஏற்பாடுகளில் ஈடுபட அவர்களுக்கு நேரம் வராது என்று எதிர்க்கட்சிப் பிரமுகர் கள் சுட்டிக் காட்டினார்.

அந்தச் சமயத்தில் இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கி யன், தேர்தல் ஆணையாளர் நாயகம் இரட்நாயக்காவை ஒரு விடயத்தில் கடு மையாகக் குறை கூறினார்.

"நாங்கள் தேர்தலை ஒத்திவைக்கும் படி கோரி இங்கு வரவில்லை. வரவு – செலவுத் திட்ட விவாதம் முடிவடையும் வரை வேட்பு மனு ஏற்பதை அறிவிக்க வேண்டாம் என்று கேட்டே வந்திருக்கி றோம். அந்தக் கோரிக்கையில் நியாய முண்டு.அப்படி இருக்கையில் நீங்கள் (தேர்தல் ஆணையாளர் நாயகம்) சிங் களப் பத்திரிகை ஒன்றுக்கு கொடுத்த பேட்டியில் 'உள்ளூராட்சித் தேர்தலை விரைந்து நடத்துங்கள் என்று கேட்ட தரப்புக்கள், இப்போது வந்து தேர்தலை ஒத்தி வைக்கக் கேட்கின்றன' என்று கருத் துக் கூறி இருக்கிறீர்கள். இது தவறா னது. நாங்கள் தேர்தலை ஒத்திவைக்கக் கோரவில்லை" – என்று அவர் திட்டவட்ட மாகத் தெரிவித்தார்.

இந்த கருத்தை மறுதலித்த தேர்தல் ஆணையாளர் நாயகம் இரட்நாயக்கா 'நான் அப்படிக் கூறவில்லை. ஆனால் தலைப்பில் அப்படி போட்டு இருக்கிறார் கள். அப்படி தலைப்பிட்டது தவறு' – என்று விளக்கம் அளித்தார்.

அப்போது குறிப்பிட்ட சாணக்கியன் "அது சரி, பத்திரிகை தவறாக தலைப் பிட்டு பிரசுத்திருந்தால் அந்தத் தலைப் போடு அந்த செய்தியை அப்படியே தேர் தல் ஆணையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தில் நீங்கள் வெளியிட்டமை எங்ஙனம் நியாயமாகும்? அப்படி வெளி யிடுவதன் மூலம் அந்தத் தலைப்பையும் அந்தச் செய்தியையும் நீங்கள் சரி என்று நியாயப்படுத்தி, உறுதி உறுதிப்படுத்தி இருக்கிறீர்கள் அல்லவா?" – என்று சாணக் கியன் எழுப்பிய கேள்விக்கு தேர்தல் ஆணையாளர் நாயகத்திடம் சரியான பதில் இருக்கவில்லை என அறிய வந் தது.

---

## அரசுக்கு ஏற்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களின் ஆட்டத்துக்கு எம்மால் ஆட முடியாது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வழக்கு விசாரணைக்காகக் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு நேற்று வருகை தந்த அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது,

"இலங்கையின் நீதித்துறை கட்டமைப்பு சுயாதீனமாக இயங்கும் என நாம் நம்பு கின்றோம். அதனை அரசு உறுதி செய்ய வேண்டும்.

வழக்கு விசாரணைகளின்போது எமது நேர்மைத் தன்மையை நாம் நீதிமன்றத் தில் நிரூபிப்போம்.

அநுர அரசுக்கு ஏற்றால் போல் அர சியல் செய்ய நாம் தயாரில்லை. அவர் களின் ஆட்டத்துக்கு எம்மால் ஆட முடி யாது. எமக்கு என்று ஒரு கொள்கை உள் ளது. எமது பிணைப்பு மக்களுடனேயே உள்ளது." – என்றார்.

"தேசிய மக்கள் சக்தி அரசு தனது கன்னி வரவு – செலவுத்திட்டத்தை சமர்பித்துள் ளதல்லவா?" – என்று கேள்விக்கு நாமல் எம்.பி. பதிலளிக்கும்போது,

07

## அரசுக்கு ஏற்றால்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"ரணில் விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டமே தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும். எனினும், தேர்தல் காலங்களில் அவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை வாக்களித்த மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்ட மூன்றாவது வரவு – செலவுத் திட்டத்தை மாற்றம் செய்து அவரை விடச் சிறப்பாக தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ளார்." – என்றார்.

## அரிய சந்தர்ப்பத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வரவு – செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டுக்கான அரச செலவினம் 4218.2 பில்லியன் ரூபா என்று ஜனாதிபதியினால் செலவு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், வரவுக்கான வழி என்ன என்பது தொடர்பில் தெளிவாகக் கூறப்படவில்லை.

100 வீத செலவில் 69 வீதமானவை நடைமுறை செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 31 வீதமானவை மட்டுமே முதலீடுகளாக உள்ளன. நாட்டின் பொருளாதாரம் மூலதன செலவுகள் ஊடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டின் மிக நெருக்கடியான நேரத்தில் பொறுப்பேற்றுள்ள அரசு இது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக பாதுகாப்புச் செலவுக்கு மொத்த வரவு – செலவுத் திட்டத்தில் 11 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் யுத்தம், சண்டை இல்லாத நேரத்தில் 442 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்னும் பெரும்பாலான மக்கள் குடியேற்றப்படவில்லை. மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. தமிழர் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், மிதமிஞ்சிய இராணுவ ஆளணியுடன் இருக்கும் இலங்கையில் 11 வீதம் இராணுவத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல. அதற்கான எதிர்ப்பையும் பதிவு செய்கின்றோம்.

இதேவேளை, இந்த நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சி பெற வேண்டுமாயின் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை பலமாக்கப்பட வேண்டும். வளமான இலங்கையைக் கட்டியெழுப்ப புலம்பெயர் இலங்கையர்களே வாருங்கள் என்று ஜனாதிபதி அழைத்துள்ளார். அவர்களின் தொடர்பை ஜனாதிபதி விரும்புகின்றார். ஆனால், இந்த மண்ணில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் அரசில் உள்ளவர்கள் பேசுவதற்குத் தயங்குகின்றனர்.

சிங்கப்பூர், ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் இலங்கையைப் போன்று முன்னேற்றமடைய வேண்டும் என்று ஒருகாலத்தில் குறிப்பிட்டது. ஆனால், இலங்கை 1940இல் எப்படி இருந்ததோ அப்படியே இன்றும் நாடு இருக்கின்றது. எனினும், குறித்த நாடுகள் இப்போது இலங்கைக்கே கடன் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளன. அதற்குக் காரணம், அந்த நாடுகளின் ஒற்றுமையும் வளமுமே ஆகும்.

இந்நிலையில் புலம்பெயர்ந்தோரே வாருங்கள் என்று அழைப்பு விடுக்கும் போது இந்த நாட்டில் தமிழரின் அடிப்படை உரிமைகள் தமது தேசத்தில் தேசிய இனமாக அடையாளப்படுத்தும் உரிமையை இந்த நாடு எவ்வாறு வழங்கப் போகின்றது என்ற கேள்விகள் அவர்களிடத்தில் உள்ளன.

இந்த நாட்டில் சமஷ்டி தொடர்பில் பேசி 2026ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகளாகிவிடும். 1926ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க எழுதிய கட்டுரைகள் சமஷ்டி தொடர்பில் குறிப்பிட்டிருந்தன. ஆனால், 1956ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தத்துக்கு முன்னர் குறிப்பிட்ட கட்டுரைகளின் மூலம் சமஷ்டி தொடர்பில் குறிப்பிட்டிருந்தார்.

தந்தை செல்வாவும் இது தொடர்பில் உரைகளை நிகழ்த்தியிருந்தார். சிங்கள தேசிய இனத்தின் அடையாளம் மற்றும் நிலம் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று இந்த மண்ணில் தோன்றி வளர்ந்த தமிழ்த் தேசிய இனத்தை அங்கீகரிக்காத வரையில் இந்த நாட்டின் தூய்மையான பயணங்களை எவ்வாறு கொண்டு செல்லப் போகின்றீர்கள் என்ற கேள்விகள் உள்ளன.

நாங்கள் எங்கள் கரங்களை உங்களுடன் கோர்த்துக்கொள்ள விரும்புகின்றோம். இரு கரங்களும் இறுகப் பற்றிக் கொள்ளப்பட வேண்டும். ஆனால், இந்த நாட்டில் சமமான பிரஜைகளாக வாழ கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதே தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன என்பதனை புரிந்துகொள்ளுங்கள்.

தமிழர்கள் சம உரிமைகளை கேட்ட போதே வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இது போன்று பல சம்பவங்கள் நடந்துள்ளன. நீறுபூத்த நெருப்பைப் போன்றே இனப்பிரச்சினை உள்ளது. தமிழரின் கோரிக்கைகளை மழுங்கடிக்கச் செய்யாதீர்கள். நாட்டில் நீங்களும் நாங்களும் சேர்ந்து வாழ வேண்டும். சமாதானத்தை அடையும் தூரம் நீண்டதாகத் தெரிகின்றது. அதனை நெருக்கமாகக் கொண்டுவாருங்கள். உங்களின் காலத்தில் அதனைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டு வாருங்கள்.

நாங்கள் பல தடவைகள் ஏமாற்றப்பட்டமையினாலேயே உங்கள் மீதான நம்பிக்கையை இழந்திருக்கிறோம்.

1987இல் கொண்டுவரப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் நாட்டில் இப்போதும் நடைமுறையில் இல்லை. இன்றும் அவை கிடப்பில் உள்ளன. இணைந்த வடக்கு, கிழக்கை உங்களின் ஜே.வி.பியினரே வழக்குத் தொடர்ந்து பிரித்தனர். ஆனால், சமாதானத்தின் கதவுகளைத் திறக்கும் சாவி உங்கள் கையில் உள்ளது. இது உங்களின் பொறுப்பாகும்.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பல்லின வல்லுனர் குழு அதிகாரப் பகிர்வு பற்றி பேசியது. 2009இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகப் பெரிய வாய்ப்பு கிடைத்திருந்தது. அவர் நினைத்திருந்தால் அப்போது அதிகாரப் பகிர்வுடன் கூடிய சமஷ்டியை வழங்கியிருந்தால் சிங்கள மக்கள் அதனை எதிர்த்திருக்க மாட்டார்கள். அதேபோன்ற வாய்ப்பொன்று இன்று உங்களின் கைகளில் உள்ளது. சிங்கள மக்கள் உங்களை நம்புகின்றனர். இந்த நம்பிக்கையூடாக சமாதான யுகத்தை ஆரம்பியுங்கள். நீங்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கொண்டு வாருங்கள். அதனைப் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதற்கான வாய்ப்பாக இந்தக் காலத்தைப் பயன்படுத்துங்கள்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, 1995ஆம் ஆண்டு மரணப்படுக்கையில் வடக்கு – கிழக்கு இன முரண்பாட்டுக்கு சமஷ்டி முறைமையிலான தீர்வு சிறந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

2015 மார்ச் மாதம் 13ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, கூட்டு சமஷ்டி முறைமை இலங்கைக்குச் சிறந்ததாக அமையும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆகவே, தற்போதைய அரசுக்குச் சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

## எதிரணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"மார்ச் 21 ஆம் திகதி வரை வரவு–செலவுத் திட்ட கூட்டத் தொடர் நடைபெறும். பாதீட்டு விவாதம் என்பது எதிரணிகளுக்கு முக்கியம். எனவே, எம்மை நாடாளுமன்றத்துக்குள் வைத்துவிட்டு தேர்தல் நடத்தப்படக்கூடாது.

பொருத்தமானதொரு சூழ்நிலையிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாதக் கணக்கத்தில் தேர்தலைப் பிற்போடுமாறு கோரவில்லை.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. தமிழ், சிங்களப் புத்தாண்டு நடைபெறவுள்ளது. சுமார் 10 நாட்கள் வரை விடுமுறை காலப் பகுதி உள்ளது. எனவே, அரச சேவையாளர்களுக்கு நெருக்கடி நிலை உருவாகும்.

எனவே, தேர்தல் திகதி தொடர்பில் சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்குமாறு நாம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கின்றோம். ஏற்கனவே செலுத்திய கட்டுப்பணமும் மீளச் செலுத்தப்படவில்லை. எமக்கு நிதி நெருக்கடி உள்ளது. எனவே, அதனை மீளச் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பழைய மொந்தையில் புதிய கள்

'பழைய மொந்தையில் புதிய கள்' - அவ்வளவுதான்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று முன்தினம் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அவதானிகளின் கருத்து இதுதான்.

நாட்டின் நெருக்கடியான பொருளாதாரக் கட்டமைப்புக்குள் சிக்கிக் கொண்டுள்ள எந்த ஆட்சித் தரப்பினராலும் அதற்கு வெளியே வந்து ஒரு புதிய மாற்றத்தை நோக்கிய விரிவான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாது என்பதுதான் யதார்த்தம்.

இந்த வரவு - செலவுத் திட்டம் குறித்து கருத்து வெளியிட்ட பொருளாதார நிபுணரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷ டி சில்வா, ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.) மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் சித்தாந்த மாற்றம் குறித்து கேள்வி எழுப்பினார். இக்கட்சிகள் தாங்கள் முன்பு எதிர்த்த அதே நவதாராளவாதப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை இப்போது முன்வைக்கின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

“அவர்கள் இப்போது ஒரு நவதாராளவாத திட்டத்தைப் பற்றிப் பேசுகின்றார்கள். இப்போது இந்த சீர்திருத்தங்கள் நல்லது என்று சொன்னால், கடந்த 40 ஆண்டுகாலமாக அவர்கள் காட்டி வந்த எதிர்ப்பு என்ன ஆனது? அவர்கள் பல தசாப்தங்களாக இந்தச் சீர்திருத்தங்களை எதிர்த்தார்கள், இப்போது திடீரென்று அவற்றை ஏற்றுக்கொண்டார்கள் என்றால், நாற்பது ஆண்டுகள் அவர்கள் சொன்னவை - செய்தவை - வீண் அல்லது அபத்தம் என்று அர்த்தம். அது ஒரு குற்றமும் கூட.” - என்று அவர் கூறினார்.

கடந்த கால பொருளாதாரக் கொள்கைகளில் இருந்து எந்தவொரு குறிப்பிடத்தக்க கருத்தியல் மாற்றத்தையும் இந்த வரவு - செலவுத் திட்டம் பிரதிபலிக்கவில்லை என்றும் கலாநிதி டி சில்வா சுட்டிக்காட்டினார்.

“முன்னைய வரவு - செலவுத் திட்டங்களுக்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. நாடு அழிந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன என்றால் மாற்றம் அவசியம். அவர்களின் சித்தாந்தம் வேறுபட்டால், அது இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பிரதிபலிக்கப்பட வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. இதை நான் தவறு என்று சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால், இது பல தசாப்தங்களுக்கு முன்பே புரிந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான்.” - என்று அவர் குறிப்பிடுவது அவதானத்துக்குரியது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்களின் சம்பளம் 15,000 ரூபா அதிகரிக்கும் என்று கூறப்பட்டாலும், அது மூன்று ஆண்டுகளுக்கான அதிகரிப்பு மட்டுமே. உண்மையான அதிகரிப்பு ரொம்பக் குறைவு என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜெயகொட தெரிவிக்கின்றார்.

இந்த வரவு - செலவுத் திட்டம், ரணில் விக்கிரமசிங்க எடுத்த நவ தாராளமயப் பாதையில் இலங்கையை மேலும் கொண்டு செல்லும் முயற்சி என்றும் அவரும் ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரமுகர்கள் அனைவரும் அடித்துக் கூறுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு, மோசமான வீழ்ச்சியைச் சந்தித்த இலங்கை அதிலிருந்து மீளுவதற்கு ஒரே பற்றுக்கோடாக சர்வதேச நாணய நிதியத்திலேயே தங்கி இருக்கின்றது. அந்தப் பின்புலத்தில் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் எல்லைகளுக்குள் நின்றுதான் நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தை எந்த ஆட்சியாளராலும் முன்னெடுக்க முடியும்.

அதுவே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் நடந்திருக்கின்றது.

நாட்டின் பொருளாதார விடயங்களில் சூழ்நிலைக் கைதியான அவரால் தமது சொந்த - சுய - பொருளாதாரக் கொள்கை நிலைப்பாட்டின் அடிப்படையில் நாட்டுக்கு ஒரு வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது என்பதுதான் யதார்த்தப் புற உண்மையாகும்.

# உறக்கத்தில் இருந்த குழந்தை உயிரிழந்த நிலையில் மீட்பு!

மட்டக்களப்பு, கடுக்காமுனை கிராமத்தில் வீட்டில் தாயுடன் உறக்கத்தில் இருந்த குழந்தை இறந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள கடுக்காமுனை பகுதியில் பிறந்து ஒன்றரை மாதமான குழந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தாயாரிடம் பால் அருந்தி விட்டு குழந்தையும் தாயும் தமது வீட்டில் உறங்கியுள்ளனர்.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக எழுப்பியபோது குழந்தை மூச்சு பேச்சு இல்லாமல் இருந்துள்ளது.

உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது, குழந்தை முன்னரே இறந்து விட்டது என்று வைத் தியர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிபிள்ளை தவக்குமார் சம் பவ இடத்துக்குச் சென்று மரண விசாரனைகளை மேற் கொண்டு, சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குப் பணித் தார்.



பரிசோதனையில் இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப பாததால் உடற்கூறுகள் மேலதிக பரிசோதனைக்காகப் பகுப் பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன.

# 6 துப்பாக்கிகளுடன் இருவர் கைது!



ஆறு துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம், கிரானேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோரளயாகம மற்றும் உல்பத்தயாய ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட இரண்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது மேற்படி இருவரும் கிரானேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிரானேகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு வெளிநாட்டுத் துப்பாக்கி யும், ஐந்து உள்நாட்டுத் துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 49 மற்றும் 51 வயதுடைய தேவஹுவ மற்றும் தம்புளுஹல்மில்லவெவ ஆகிய பகுதி களை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிரானேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ரணிலின் மூன்றாவது பட்ஜட்டையே அநுரகுமார முன்வைத்துள்ளாராம்

## ஐக்கிய மக்கள் சக்தி விமர்சனம்



சர்வதேச நாணய நிதியம் மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் வரவு – செலவுத் திட்டத்தையே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ளார் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித்துள்ளது.

நாட்டில் 7 சதாப்தகால பயணம் சரி என்பதை அநுரகுமார திஸாநாயக்க ஏற்றுள்ளார் என்பதையே பாதீட்டு முன்மொழிவுகள் உறுதிப்படுத்துகின்றன என்று பொருளாதார நிபுணரும் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரணில் விக்கிரமசிங்கவின் மூன்றாவது வரவு – செலவுத் திட்டத்தை அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ளார் என்பது போல்தான் நிலைமை உள்ளது.

இதுவரை காலமும் நாட்டில் இருந்த பொருளாதார முறைமை தோல்வி என்று கூறிவந்த ஜே.வி.பியின் தலைவர், சர்வதேச நாணய நிதியத்தின் நெறிமுறைகளுக்கு அமையச் செயற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தில் திருத்தம் செய்து அதையும் ஏற்றுக்கொண்டுள்ளார். தனியார் மயமாக்கல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, நாடு புதிய திசையை நோக்கிச் செல்லவில்லை. 77 வருட கால பயணம் சரி என்பதை ஜனாதிபதி அநுரகுமார ஏற்றுள்ளார்.” – என்றார் கபீர் ஹாசீம்.

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப இந்த வருடத்துக்குள் நடவடிக்கை

## சபையில் பிரதமர் ஹரிணி உறுதி




நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்துக்குள் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் இந்த வருடத்துக்குள் பெரும்பாலான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் என்றும் அவர் சபையில் நம்பிக்கை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சாமர சம்பத் தசநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

சாமர சம்பத் தசநாயக்க எம்.பி. தமது கேள்வியின் போது,

“மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு வந்தார்கள். எனினும், அதற்கான கால எல்லையை மீண்டும் நீடிக்காமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கல்வி அமைச்சர் அறிவாரா?” எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர்,

“தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிகமாகக் காணப்படும் ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும், நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், பின்னர் கிடைத்த நீதிமன்றத் தீர்ப்பையடுத்து மீண்டும் அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

அந்தவகையில் இந்த வருட இறுதிக்குள் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.





# தேசிய மக்கள் சக்தியின் மென்போக்கு ஆதிக்கவாத அரசியல்!

## 'புதிய திசைகள்' கட்டமைப்பு தெளிவுபடுத்துகின்றது

இலங்கையின் ஆட்சி பீடத்தில் அப்பட்டமான பௌத்த – சிங்கள ஆதிக்க அரசாங்கங்களையே தொடர்ச்சியாக பார்த்துப் பழக்கப்பட்டுவிட்ட தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை – குறிப்பாக ஈழத்தமிழரைப் பொறுத்தவரை – அவர்களுடைய தேசியக் கோரிக்கைகளுக்கு எதிரான விடயங்களை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்து பரப்புரை செய்வதையே பிரதான அரசியலாகச் செய்துவந்த கடந்த ஆட்சியாளர்களில் இருந்து மாறுபட்டு, அனைவரையும் இலங்கையர் என்னும் வரை யறைக்குள் தோள்மீது கைபோட்டு தந்திரமாக அழைத்துச் செல்லும் அநுரவின் அணுகுமுறை வித்தியாசமாகத் தெரிவதில் வியப்பில்லை.

இலங்கைத் தீவில் ஒரு மாற்றத்தைக் கொண்டு




வரவேண்டும் என்னும் வகையில் ஓர் இடதுசாரி வகைப்பட்ட இயக்கமாக தன்னை நிறுத்திக் கொண்ட றோஹண விஜயவீர தலைமையில் இருந்த ஜே.வி.பி. சிங்கள மக்களின் கிராமங்களிலும் இளைஞர்கள், மாணவர்கள் மத்தியிலும் ஒரு சமூக இயக்கமாக இயங்கிய அனுபவம் கொண்டது.

ஈழத்தமிழரது தேசிய விடுதலைக் கோரிக்கை பலம் பெற்று விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பலம் பெறத் தொடங்கிய காலங்களில் தமிழர் களின் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து கொண்டதாகக் காட்டிக் கொண்ட ஜே.வி.பி., போராட்ட இயக்கங்கள் பலம் பெற்று இராணுவ ரீதியான வெற்றிகளை அடையும் நிலையிலும் தமிழர்கள் தனித்துவமான போராட்ட வழிமுறையை அடையும் நிலையிலும் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழ் மக்களது உரிமைக் கோரிக்கைகளுக்கும் எதிரான நிலைப் பாட்டை அடைந்து, பௌத்த – சிங்கள அரசின் நெருங்கிய கூட்டாளியாக இருந்ததோடு இலங்கை இராணுவத்திற்கு ஆள்திரட்டும் பணிகளிலும் மும்முரமாக ஈடுபட்டது.

ஒரு சமூக இயக்கமாக இருந்த ஜே.வி.பி., ஓர் அரசியல் கட்சியாக மாற்றம் கண்ட போது அது தன்னளவில் பௌத்த – சிங்களப் பேரினவாதத்தை முழுமையாகக் கையிலெடுத்துக் கொண்ட கட்சியாக பரிணமித்தது. சிங்கள மக்கள் தளங்களை அடிப் படையாகக் கொண்டு உருவாகிய குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இடதுசாரிக் கட்சிகள் சில தவிர மிகுதி அனைத்து பிரிவினரும் இலங்கை அரசின் கூட்டாளிகளாயினர் என்பது தான் வரலாறு. இதில் ஜே.வி.பியும் விதிவிலக்காக இருக்கவில்லை.

தமிழர்களின் இன உரிமைக்கான போராட்டம் என்பது இவர்களது இனவாதக் கண்களுக்கு தனியே ஒரு பிரிவினைப் போராட்டமாக மாத்திரம் தெரிந் திருந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இதன் விளைவாக, உலகில் போராடும் தேசிய இனங்களுக் கான கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை என்னும் கோட்பாடு இலங்கைத் தீவிற்கு பொருத்தமற்றது என்னும் கோட்பாட்டு திரிபையும் சர்வசாதரணமாக ஜே.வி.பியினர் பேச ஆரம்பித்தார்கள். இந்திய எதிர்ப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த இவர்கள், மலையக மக்களை இந்திய அரசின் முகவர்கள் என்று வகைப்படுத்தி உழைக்கும் மக்கள் எதிர் அரசியலை வெளிப்படுத்தினர்.

இலங்கை அரசியலில் மூன்றாவது தரப்பாக வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்த ஜே.வி.பி., தமிழ் மக்களின் போராட்டத்தின் முக்கியமான கட்டங் களில் பௌத்த – சிங்கள அரசின் ஒடுக்கு முறைகளுக்கான கோட்பாட்டு விளக்கவாதிகளாகவும்

தொடர்ச்சி ▼

# தேசிய மக்கள் சக்தியின் மென்போக்கு ஆதிக்கவாத அரசியல்!

தொடர்ச்சி▲

அந்த ஒடுக்குமுறைகளுக்கான பக்கபலமாகவும் நின்றிருக்கிறார்கள். வடகிழக்கு மாகாணங்கள் இணைப்பை நீதிமன்றத்தை நாடி துண்டித்ததில் இவர்களின் பங்கு பிரதானமானது. சுனாமியால் அழிவுகளை சந்தித்த தமிழ் மக்களுக்கான சர்வ தேச நிதி ஒதுக்கீடுகளை "புலிகளுக்கு அங்கீகாரம்" என்ற பிரச்சாரத்துடன் உயர்நீதிமன்றம் ஊடாக இடைக்கால தடையைக் கொண்டு வந்து சுனாமி நிவாரண கட்டமைப்பை முடக்கியதில் பிரதான பங்கு வகித்திருக்கிறார்கள்.

என்.பி.பி.(தேசிய மக்கள் சக்தி) என்பது ஜே.வி.பி. நகர்ந்திருக்கும் மூன்றாவது தளம். இதை ஒரு சிவில் சமூகத்தளமாக உருவமைத்த வகையில் சில சிறு கட்சிகளை, அமைப்புக்களை இணைத்துக் கொண்டு அமைப்பின் மையத்தில் ஜே.வி.பி. அமர்ந்தபடி பயணிக்கிறது. 2019 இல் உருவாகிய என்.பி.பி. அணியானது நீண்டகால தேசிய இன ஒடுக்குமுறையின் விளைவான யுத்தம், ராஜபக்ஷ அணியின் ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளினால் நாடு பொருளாதார ரீதியாக அதலபாதாளத்திற்குள் சென்று கொண்டிருந்ததை எதிர்த்துக் கிளம்பிய அரகலிய என்னும் மக்கள் போராட்டம் வளர்ச்சிகண்ட பின்னர் முக்கிய பங்கெடுத்துக் கொண்டதன் பலாபலனை அதற்கு அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலிலும் அதன் அலையில் அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அறுவடை செய்து கொண்டனர்.

ஜே.வி.பியின் கருத்தியல் தளத்திலும் அதன் நடவடிக்கைகளிலும் இந்திய எதிர்ப்பு தொடர்ச்சியாக இருந்துவந்துள்ளதோடு தமிழ் மக்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் அங்கம் என்று கட்டமைத்து சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் குறித்த அச்சத்தையும் சந்தேகத்தையும் விதைத்து வந்துள்ளது. இன்று அதே இந்தியாவுடன் என்.பி.பி. முகத்துடன் நட்பு பாராட்டுவதும் வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதும் அவர்களின் நம்பகத் தன்மையை வெகுவாகக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஈழத்தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தமிழர் ஆகிய மூன்று தமிழ்பேசும் மக்களின் அரசியல் தலைமைகளின் தான்தோன்றித்தனம், அதிகாரத்துவம், கட்சிகளை மக்கள் மயப்படுத்தத் தவறியிருந்த மக்களை மதிக்காத தன்மை என்னும் அடிப்படைப் பலவீனங்களுக்கு மாற்றாக மக்கள் இயக்கம்,அரசியல் கட்சி, சிவில் சமூக கட்டமைப்பு என்னும் மூன்று தளங்களிலும் வேலை செய்த அனுபவமும் மக்களுடனான அணுகுமுறையும் தமிழ் பேசும் மக்கள் பிரிவுகளை பெரிதும் கவர்ந்திருக்கிறது. குறிப்பாக ஈழத்தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு ஒரு மிகப்பெரிய பாடத்தையும் ஒரு அரசியல் சோதனையையும் இந்த என்.பி.பியின் அணுகுமுறையும் தேர்தல் வெற்றிகளும் கொடுத்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

பிரித்தானிய ஆட்சிக்கு பிந்தைய இலங்கை அரசியலில் இப்படியொரு தரப்பு ஆட்சிக்கு வந்திருப்பது இதுதான் முதல் தடவை. ஈழத்தமிழர் முன்வைக்கும் தமது இனம் சார்ந்த கோரிக்கைகளை நேரடியாக எதிர்கொண்டு மறுக்காது, அதைக் காது கொடுத்துக் கேட்பது போல பாசாங்கு செய்து கொண்டு, தமிழரின் உரிமைக் கோரிக்கையின் இருப்பை இல்லாது செய்யும் வேலைத்திட்டத்தை நகர்த்தும் மிக நுட்பமான அணுகுமுறையை என்.பி.பி .அரசாங்கம் மேற்கொள்கிறது.

அரச திணைக்களங்களாலும், படைகளாலும் கையகப்படுத்தப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சில பகுதிகளை விடுவிப்பதும் சில பாதைகளை விடுவிப்பதையுமே பெரும் நடவடிக்கையாக அறிவிப்பதும், சமபந்தியில் சாப்பிடுவது, மக்களில் ஒருவனாக அநுர காட்டிக் கொள்வதும், தமிழ் மக்களுக்கு சிங்களம் வாசிக்க முடியாமைதான் இனப்பிரச்சனையின் அடிப்படை என்பது போன்ற கருத்துக்களை வைப்பதும்தான் இவர்கள் தமிழ் மக்களை நோக்கி செய்யும் வேலைகளும் அணுகுமுறைகளுமாகும்.

நாட்டில் நிலவும் பொருளாதார வீழ்ச்சி நிலையை சரி செய்வதற்கான நடவடிக்கைகளாக என்.பி.பி. முன்னெடுக்கும் சில அணுகுமுறைகள் என்பன ஊழல், நிர்வாக சீர்கேடுகளில் குறிப்பிட்டளவு மாற்றங்களை கொண்டுவரும் வாய்ப்புக் கொண்டவை என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். இலங்கை நாட்டில் வாழும் அனைத்து வகை மக்களுடனும் கொண்டிருக்கும் அணுகுமுறையும் நாடு இதுவரை கண்டிருக்காத வகையில் மாறுபட்டதாக இருக்கிறது. இவை அனைத்தும் மேற்பரப்பிலான அணுகுமுறைகளும் வெளிவடிவங்களும் மாத்திரமே அன்றி அடிப்படைப் பிரச்சினையைத் தொடும் நடவடிக்கைகள் அல்ல.

தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரமும் வேலைவாய்ப்புகளும் வளர்ச்சி கண்டுவிடக் கூடாது என்பதற்காக பல தளங்களிலும் தேசியப் பொருளாதாரம் என்ன வகையில் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை என்னும் வகையில் கடந்த கால அரசாங்கங்கள் நடந்து வந்திருக்கின்றன. மக்கள் மீது திணிக்கப்பட்ட நீண்டகால யுத்தம் நாட்டை பெரும் கடனாளி ஆக்கியிருக்க, சிங்கள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் பிரிவாக மாற்றப்பட்ட படைகளுக்கான ஆள்சேர்ப்பு என்பது இன்று தமிழர் நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் ஒரு வேண்டா சதையாக இராணுவப் பட்டாளம் தமிழர் நிலங்களில் பரவிக்கிடந்து அரச செலவின் பெரும் பகுதியை விழுங்கிக் கொள்கிறது.

மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறுவதற்கான கண்துடைப்பு வேலையாக அரசியல் வாதிகள், எதிர்த்தரப்பினரின் செலவீனங்களில் அக்கறை செலுத்தும் இந்த என்.பி.பி. அரசாங்கம் மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக எதுவும் பேசுவதில்லை. இலங்கையில் வெவ்வேறு அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் நிலையான அதிகாரப் பிரிவுகள்தான் தொடர்ச்சியாக இங்கு ஆட்சி புரிகின்றன. செல்வந்தர்கள். பெருநிறுவன தர

தொடர்ச்சி▼

# தேசிய மக்கள் சக்தியின் மென்போக்கு ஆதிக்கவாத அரசியல்!

**தொடர்ச்சி▲**

கர்கள், பௌத்த பீடங்கள், படைகளின் உயரணிகள், செல்வந்த அரசியல்வாதிகள் ஆகிய பிரிவுகள் தான் இந்த நாட்டின் அரசு என்னும் அடித்தளத்தை வைத்திருக்கின்றன.

என்.பி.பி .அரசாங்கம் அமைந்ததில் இருந்து இவற்றில் எந்த அடிப்படை மாற்றமும் நிகழ்ந்து விடவில்லை. இந்த அரசின் அடிப்படையில் இருந்து தான் பௌத்த – சிங்களப் பேரினவாதம் ஊற்றெடுத்து பெருகியிருக்கிறது. இந்த ஊழல், நிர்வாக சீர்கேடுகள் என்பனவற்றை அனுபவித்துத்தான் இந்த அரசு நிலை கொண்டிருக்கிறது. இன ஒடுக்குமுறையினதும் பௌத்தத்தின் பண்பாட்டு ஆக்கிரமிப்பின் பலனையும் இந்த அணிதான் அனுபவிக்கிறது. இலங்கை தீவில் உண்மையில் மாற்றத்தைக் கொண்டு வருவதாக இருந்தால் இந்த ஆதிக்க பிரிவுகளின் எதிர்நிலையில் நின்று அவர்களின் ஆதிக்கத்தை தணிப்பதன் மூலம்தான் அது சாத்தியமாகும். பௌத்த ஆதிக்கம் தொடர்பாகவோ, இராணுவ மயமாக்கல் தொடர்பாகவோ வாய் திறக்க மறுக்கும் என்.பி.பியின் வெளிவேச அரசியல் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டு வருகிறது.

ஜே.வி.பியாக தமிழ் பேசும் மக்களின் அனைத்து அழிவுகளுக்கும் பங்குதாரராக நின்ற இன்றைய என்.பி.பி. என்பது அந்த மக்களிடம் மன்னிப்புக் கேட்பதில் இருந்துதான் அதன் அரசியலை தொடங்கியிருக்க வேண்டும். அதை விடுத்து, இலங்கை தீவில் அப்படி எதுவும் நிகழவில்லை, நாம் இலங்கை அரசியலின் புது அவதாரங்கள் என்பது போல மிகத் திறமையாக கபட நாடகம் ஆடிவருகின்றனர். இலங்கை பௌத்த – சிங்கள ஆதிக்க அரசின் நவீன வடிவமாக ஒளிரும் என்.பி.பி. என்னும் விளக்கில் விட்டில் பூச்சிகளாக தமிழ் பேசும் மக்கள் விழும் ஆபத்தை உணர்வோம். இலங்கையராக ஐக்கியப்படுவோம் என்னும் கோரிக்கைக்குள் அடங்கியிருக்கும் தமிழ் பேசும் மக்கள் பிரிவுகளின் தனித் தன்மைகளை அழிக்கும் நிகழ்ச்சி நிரல் என்பது நவீன பௌத்த – சிங்கள பேரினவாதமே தவிர வேறில்லை.

ஜே.வி.பியின் அரசியல் பாரம்பரியத்தில் இருந்து உருவாகியிருக்கும் சில அமைப்புகளை இந்தக் காலகட்டத்தில் எம் அக்கறைக்குட்படுத்திக் கொள்வது அவசியமாகும். கட்சியில் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்ட காரணத்திற்காக ஜேவிபி யில் இருந்து பிரிந்து சென்று தனிக் கட்சியாக உருவாகியுள்ள முன்னிலை சோசலிசக் கட்சியும் (FLSP), இந்தக் கட்சியின் அரகலிய போராட்ட பங்கேற்பின் மூலம் உருவாகிய மக்கள் போராட்ட முன்னணி என்னும் அரசியல் இயக்கமும் இன்று தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மற்றும் குறிப்பாக ஈழத்தமிழர் மீது நிகழ்த்தப்படும் இனரீதியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பேசத்தலைப்படுகின்றனர்.

சிங்கள – பௌத்த அரசு எந்தளவு இனவாதம் கொண்டிருக்கிறதோ அதே அளவு தமிழ் தேசிய வாதமும் இனவாதம் கொண்டிருப்பதாகவும், ஆகவே இரண்டு இனவாதங்களுக்கும் எதிராக நாம் இலங்கையர் என்னும் வகையில் சமவுரிமையுடன் வாழ்வதற்கு போராடுவோம் என்பதுவும், இலங்கை தீவிற்கு தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை என்னும் கோட்பாடு பொருந்தாது என்னும் தாய் கட்சியான ஜே.வி.பியின் அதே கொள்கையுடன் (FLSP) மற்றும் மக்கள் போராட்ட முன்னணி ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கை அமைந்திருக்கிறது. எவ்வாறாயினும், தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடர்பாகவும் குறிப்பாக ஈழத்தமிழர்களின் மேல் நடைபெறும் இன ரீதியான ஒடுக்குமுறைகள் தொடர்பாகவும் இவர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புக் குரல் கொடுத்து வருவதை நாம் வரவேற்பதோடு ஒடுக்கும் தேசிய இனத்திற்குள் இருந்து வரும் ஒரு நட்புக் கரமாகவே இவர்களை நாம் பார்க்கலாம்.

இன ஒடுக்குமுறை அப்பட்டமாக நிலவும் இலங்கையில் அதற்கு எதிரான மாற்று வழிகள் குறித்துப் பேசாது, சிங்களத் தேசிய இனத்தின் சார்பாக தமிழ் பேசும் மக்கள் பிரிவுகளுக்கு தனி இருப்புகளுக்கான உத்தரவாதத்தை அளிக்காது, நாம் இலங்கையர் என்னும் ஆண்டான் மொழியில் பேசுவது என்பது அடிப்படையில் பௌத்த – சிங்களப் பேரினவாத அடித்தளம் கொண்டது என்பதனை இந்த அமைப்புகளின் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் சிந்திப்பது அவசியம் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

ஈழத்தமிழரின் ஐக்கியத்தை குலைப்பதற்காக எதிர் அரசியல் தரப்புகளால் இதுவரைகாலம் கையாளப்பட்டு வந்த தமிழ் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சமூக முரண்பாட்டு தளங்களை சரியாக விளங்கிக் கொண்டு, அவற்றிற்கு எதிராகவோ அல்லது அந்த முரண்பாடுகளை தணிக்கும் வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, இந்த முரண்பாடுகளை பயன்படுத்தி தனக்கான ஆதரவுத் தளத்தை சந்தர்ப்பவாதமாக என்.பி.பி. உருவாக்கிக் கொள்ள விழைகிறது.

நாட்டு மக்களை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் எடுக்கும் நேர்மையான எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு வழங்குவதில் தவறில்லை. என்.பி.பியின் தற்போதைய மென்போக்கு அரசியல் அணுகுமுறை என்பது மக்களை நேசிக்கும் தெற்கு சக்திகளுக்கும், தமிழ் பேசும் அனைத்து பிரிவினருக்கும் அந்த மக்களுக்கான உண்மையான, நேர்மையான பணிகளைச் செய்வதற்கான இடைவெளியை கொடுத்திருக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது. சந்தர்ப்பவாத அரசியலுக்கு என்று தேவைப்படும் அரசியல் இடைவெளியை மக்களை நேசிக்கும் சக்திகளும் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

என்.பி.பி. அரசாங்கத்தின் வெளிவேசத்தை இனங்காணுவதும் விமர்சிப்பதுடன் மட்டும் நிறுத்தி விடாது தமிழ்ப் பேசும் மக்களது தவறான அரசியல் தலைமைகளை மாற்றுவதிலும், சரியான தலைமைகளிடம் ஒற்றுமையைக் கோருவதும் இன்றைய தேவையாக இருக்கிறது.

*நன்றி : புதிய திசைகள்*
*(13/02/2025)*

# மன்னார் தீவில் கனியமணல் அகழ்விற்கான களஆய்வை நிறுத்துக! மீறி நடந்தால் களேபரம் ஏற்படும் என ரவிகரன் எம்.பி. எச்சரிக்கை



**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார்த் தீவில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக கனியமணல் அகழ்வதற்காக, 19 ஆம் திகதி இன்றைய தினம் மேற்கொள்ளப்படவுள்ள களஆய்வினை உடனடியாக நிறுத்த வேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களின் விருப்பமின்றி இந்தக் களஆய்வு இடம்பெற்றால் மக்கள் போராட்டம் பெரிய அளவிம் முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், இதனால் ஆபத்தான நிலமைகள் தோன்றலாமெனவும், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் ஏற்படுமெனவும் எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுவிவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மன்னார்த் தீவுப் பகுதியில் கனியமணல் அகழ்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மன்னார் தீவுப் பகுதி என்பது மிகவும் குறுகிய தாழ்வான நிலப்பகுதியாகும். கடல்நீர் மட்டத்திலிருந்து தாழ்வான நிலப்பகுதி என்பதால் மழைக்காலத்தில் நீர் வழிந்தோட முடியாமல் பொதுமக்கள் தொடர்ந்தும் இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தை தாங்கு திறன்கொண்டதாக தீவுப்பகுதியின் தரைத்தோற்ற அமைவிடமில்லை. அதனால்தான் மன்னார் தீவில் மூன்று மாடிகளுக்குமேல் கட்டடங்களை அமைப்பதற்கு நகரஅபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்குவதில்லை. ஆகவே இப்பகுதியில் கனியமணல் அகழ்வதென்பது மிகவும் பாரதூரமான விளைவுகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையின்கீழ் 23அரச திணைக்களங்கள் மன்னார் தீவுப் பகுதிக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை வழங்குவதற்குரிய ஏற்பாட்டிற்கு கடந்த இரண்டுமுறை சென்றபோதும் மக்களின் பாரிய எதிர்ப்புக்காரணமாக மேற்கொள்ளமுடியாத நிலமை காணப்பட்டது.

இந் நிலையில் பெப்ரவரி 17 மன்னார் நீதிமன்றத்தில் போராட்டத்திற்கு எதிராக தடை உத்தரவு பெற்றுக்கொண்டு, பெப்ரவரி19 அப்பகுதியில் களஆய்வினை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்த மக்களுடைய விருப்பம் இல்லாமல் தனியார் காணிக்குள் அத்துமீறி உட்புகுந்து இந்த ஆய்வை மேற்கொண்டு, தனியார் நிறுவனங்களுக்கு கனியமணல் அகழ்விற்கு அனுமதி வழங்குவதென்பது அந்த மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகும்.

எந்தத் திட்டமாக இருந்தாலும் மக்களுடைய விருப்பமின்றி செயற்படுத்த முடியாது. பாரிய அளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவதால் ஆபத்தான நிலமைகள் தோன்றலாம். சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

ஆகவே உடனடியாக இந்தக் கள ஆய்வை மத்திய சுற்றாடல் அதிகார சபையும், ஏனைய திணைக்களங்களும் நிறுத்தவேண்டுமென இந்த உயரியசபையின் ஊடாக கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

# யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய புதிய நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்டது




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கான புதிய நிர்வாகம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

இதன்படி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவராக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ரி.லிகிதரும், மாணவர் ஒன்றியச் செயலாளராக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த ரி.அனோஜனும், மாணவர் ஒன்றிய பொருளாளராகக் கலைப் பீடத்தைச் சேர்ந்த எஸ்.மிதுர்சனும் தெரிவானமையுடன் ஏனைய பதவி நிலை உறுப்பினர்கள் ஒவ்வொரு பீடத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிதாக தெரிவான மாணவர் ஒன்றிய நிர்வாகம் எதிர்வரும் ஒரு வருடத்திற்கு செயற்படவுள்ளது.

# மட்டு. சிறையில் உள்ள கணவருக்கு ஐஸை மறைத்துக் கொண்டு சென்ற மனைவி கைது

(கனகராசா சரவணன்)

ஐஸ் போதை பொருளுடன் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கணவருக்கு உணவு பொருளுடன் புகையிலைக்குள் ஒரு கிராம் ஐஸ் போதை பொருளை சூட்சுமமாக மறைத்துக் கொண்டு சென்ற 27 வயதுடை மனைவியை நேற்று செவ்வாய்க்கிழமை சிறைச்சாலை அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டுமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கடந்த ஒரு மாத்துக்கு முன்னர் ஐஸ் போதை பொருளுடன் கைதானார். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமையையடுத்து அவரை விளக்கமறியில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். அதற்கு அமைய மட்டு சிறைச்சாலையில் ஒரு மாதகாலமாக அவர் இருந்து வருகின்றார்.

இந்த நிலையில் நேற்றுப் பகல் 12.30 மணிக்கு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கணவரை பார்ப்பதற்காக உணவு மற்றும் புகையிலையை மனைவி எடுத்துச் சென்றபோது சிறைச்சாலை அதிகாரிகள் அவற்றைச் சோதனையிட்டனர். புகையிலைக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிராம் ஐஸ் போதை பொருளை அதிகாரிகள் மீட்டமையுடன் அந்தப் பெண்ணை அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஓட்டுமாவடி 3 ஆம் பிரிவு உசேனியா வீதியைச் சேர்ந்த 27 வயதுடைய பெண்ணாவர். அவரைச் சிறைச்சாலை அதிகாரிகள் தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைமட்டு.தலைமையகப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பியங்கர ஜயரத்னவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

ஊழல் குற்றச்சாட்டில் ஈடுபட்டதாக தெரிவித்து முன்னாள் அமைச்சர் பியங்கர ஜயரத்னவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பியங்கர ஜயரத்ன சிவில் விமான சேவைகள் அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் 494,000 ரூபாவை சிலாபத்திலுள்ள வங்கியொன்றில் வைப்பிலிடுமாறு அதிகாரிகளை கோரிய தன் ஊடாக இலஞ்ச ஊழல் தடைச் சட்டத்தின் கீழ் தவறிழைத்துள்ளார் என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் முன்னாள் அமைச்சரை 5 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு



கொழும்பு மேல் நீதிமன்றின் நீதிபதி மஞ்சுள திலக ரத்ன உத்தரவிட்டுள்ளார்.

லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் முன்னாள் அமைச்சருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# சிவராத்திரி பாத யாத்திரை

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு பாதயாத்திரை முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளைசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கவுள்ள யாத்திரை எதிர்வரும் 26 ஆம் திகதி திருக்கேதீச்சரத்தை சென்றடையவுள்ளது.

பாதயாத்திரையில் பங்கேற்க விரும்புவோர் 0776132176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிரிஷ் கொடுக்கல் – வாங்கல் வழக்கில் நாமலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கிரிஷ் கொடுக்கல் – வாங்கல் ஊடாக 70 மில்லியன் ரூபாவை குற்றவியல் முறைகேடு செய்ததாக குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினரை ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 மில்லியன் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளிலும் விடுவிக்க மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டார்.



அத்துடன், பிரதிவாதியின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குடன் தொடர்புடைய கோப்புகள் மேல் நீதிமன்றிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக நீதிபதி பகிரங்க மன்றில் அறிவித்தார்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நிதிக்குற்றப்புலனாய்வு பிரிவின் விசாரணை அதிகாரிகள் மன்றில் ஆஜராகியிருந்ததுடன், அடுத்த வழக்கு நாள்களிலும் ஆஜராகுமாறு அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேரா ஆஜராகியிருந்ததுடன் பிரதிவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மென்டிஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.



# தேர்தலுக்கு முன்னர் கூறியவற்றைப் புறக்கணித்து வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது

## ஹர்ஷ டி சில்வா எம்.பி குற்றச்சாட்டு

தேர்தலுக்கு முன்னர் கூறிய விடயங்களைப் புறக்கணித்து அரசாங்கம் தங்களது வரவு செலவு திட்டத்தை நாடாளுமன்றில் முன்வைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைப்பதாகத் தெரிவித்த அரசாங்கம் தற்போது பொருள்களின் விலையை அதிகரித்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வேதனம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அதிகரிக்கப்படும் என அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். அப்படி செய்ய முடியாது என நாங்கள் கூறினோம். இல்லை முடியும் என்றார்கள். குறைந்தபட்ச வேதனம், வாழ்க்கைச் செலவு இரண்டையும் சேர்த்தால் 57,500 ரூபாய் என நாங்கள் வெளியிட்ட கொள்கை பிரகடனத்தில் தெரிவித்திருந்தோம். அதற்கு 300 ரூபாயை சேர்த்து ஜனாதிபதி 57,800 ரூபாய் எனக் கூறுகிறார். பாதீட்டில் வேதனம் அதிகரிக்கப்படும் விதம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாங்கள் செப்டம்பர் மாதம் 57,500 ரூபா எனக் கூறிய போது அவ்வாறு செய்ய முடியாது எனக் கூறினார்கள். அதைவிட செய்ய முடியும் எனக் கூறினார்கள்.

அதை மூன்றாக பிரித்து கொடுக்கிறார்கள். 15,750 ரூபாயில் 8,250 ரூபாயே கிடைக்கும். மக்களுக்கு 15,000 ரூபாய் கணக்கை கூறிவிட்டு கிடைப்பது 8,000 ரூபாயே ஆகும். அதிலும் ஏப்ரல் மாதம் குறைந்தபட்சம் 5,975 ரூபாய் கிடைக்கும். 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் 1,137 ரூபாய், 2027 ஆம் ஆண்டு 1,137 ரூபாய் கிடைக்கும். இந்த வருடத்திற்கு 5,000 ரூபாயே ஒதுக்கப்பட்டுள்ளது.” – என்றார்.



# இலங்கை கடற்படையினரைக் கண்டித்து காரைக்காலில் மீனவர்கள் போராட்டம்!

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் மீனவர்களினால் நேற்று முன்தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அப்பகுதியில் கடையடைப்புப் போராட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையிர் கடந்த சில நாட்களுக்கு முன்னர், இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

காரைக்கால், கிளிஞ்சல் மேடு பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைக்கால் மீனவர்கள் பாரிய போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் செயற்பாடுகள், மற்றும் தமிழ்நாட்டு மீனவர்களை காக்க தவறிய இந்திய மத்திய அரசாங்கமான பா.ஜ.க. அரசாங்கத்தை கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட 11 மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்களினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு ஆதரவினை வழங்கும்பொறுட்டு, அப்பகுதியில் கடையடைப்புப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களும் அவர்களது குடும்பத்தினரும், காரைக்கால் ரயில் நிலையத்தில் வேளாங்கண்ணிக்கு செல்லும் ரயில் முன்பு தண்டவாளத்தில் படுத்து போராட்டம் நடத்தியதால் பெரும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

# சிறுமி கூட்டு துஷ்பிரயோகம்; 7 கல்லூரி மாணவர்கள் கைது

கோவையில் 17 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், கல்லூரி மாணவர்கள் 7 பேரை பொலிஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து கைது செய்தனர்.

கோவை மாநகர பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் தம்பதிக்கு 17 வயதில் மகள் உள்ளார். பிளஸ் 2 படித்து வந்த இவர், குடும்பச் சூழல் காரணமாக படிப்பை நிறுத்தி விட்டார். தனது தாத்தா உயிரிழந்ததால் பாட்டிக்கு துணையாக அவரது வீட்டில் இச்சிறுமி தங்கி வசித்து வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 16 ஆம் திகதி இரவு சிறுமி மாயமானார். இதையடுத்து சிறுமியின் பாட்டி, பெற்றோர் பல இடங்களில் தேடியும் அவர் கிடைக்கவில்லை. தொடர்ந்து சிறுமி மாயம் குறித்து அவரது பாட்டி, உக்கடம் பொலிஸாரிடம் புகார் அளித்தார். பொலிஸார் வழக்குப் பதிந்து தேடி வந்தனர்.

இந்நிலையில், மறுநாள் அதிகாலை சிறுமி வீட்டுக்கு வந்துள்ளார். அவரிடம் பெற்றோர் மற்றும் பாட்டி விசாரித்த போது, நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்ததாக கூறினார். தொடர்ந்து உக்கடம் பொலிஸார், சிறுமியிடம் விசாரித்தனர். அப்போது, சமூக வலைதளம் மூலம் பழக்கமான கல்லூரி மாணவர்கள் தங்கியிருந்த அறைக்கு சென்றிருந்ததாகவும், அங்கு கல்லூரி மாணவர்கள் 7 பேர் தன்னை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தனர் என தெரிவித்துள்ளார். இதனால், அதிர்ச்சியடைந்த பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தினர்.



இதுகுறித்து விசாரணையில் கிடைத்த தகவல்கள் குறித்து பொலிஸார் கூறும் போது, "மாயமானது தொடர்பாக சிறுமியிடம் விசாரிக்கப்பட்டது. சிறுமிக்கு ஸ்னாப் சாட் எனப்படும் சமூக வலைதள செயலி பயன்படுத்தும் பழக்கம் உள்ளது. அதன் மூலம் கோவையில் உள்ள கோவைப் புதூரைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் இருவர் அறிமுகமாகியுள்ளனர்.

தொடர்ந்து சில நாள்கள் பேசிய பின்னர், அந்த சிறுமியை தாங்கள் தங்கியிருக்கும் அறைக்கு வருமாறு சிறுமியை அழைத்துள்ளனர். அதன்படி, கடந்த 16 ஆம் திகதி சிறுமி, மேற்கண்ட இருவருடன் சேர்ந்து அவர்கள் தங்கியுள்ள அறைக்குச் சென்றுள்ளார். அந்த அறையில் மேலும் 5 மாணவர்கள் இருந்துள்ளனர்.

தொடர்ந்து மேற்கண்ட 7 பேரும் சேர்ந்து சிறுமியை கூட்டாகவும், தனித் தனியாகவும் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இதையடுத்து சிறுமி மாயம் என்ற பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்கை போக்சோ பிரிவுக்கு மாற்றி, கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த ஏழுபேரும் நேற்று கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் திருநெல்வேலி, தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

இவர்கள் 7 பேரும் கோவைப்புதூர், குனியமுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள 3 தனியார் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டு, 3 ஆம் ஆண்டு படித்து வருபவர்கள் ஆவர். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்கு பின்னர், கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். சிறுமியை அழைத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறது," என்றனர்.

# ட்ரம்ப், எலோன் மஸ்க்கிற்கு எதிராக அமெரிக்காவில் வெடித்த போராட்டம்







அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்று ஒரு மாதமாகும் நிலையில், அவருக்கு எதிராக வோஷிங்டனில் நேற்று முன்தினம் பாரியளவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அரசு நிறுவனங்களில் பெருமளவில் ஆட் குறைப்பு செய்வதற்கான அவரது நிர்வாகத்தின் முயற்சிகள் மற்றும் ஆவணமற்ற குடியேறிகளை நாடு கடத்துவது உள்ளிட்ட கொள்கைகளைஎதிர்த்துதிங்களன்றுவொஷிங்டனிலும் அமெரிக்கா முழுவதும் ஆயிரக் கணக்கானோர் இந்த பேரணியை நடத்தினர்.

மேலும், அரசுத் துறைகளில் தொழிலதிபர் எலோன் மஸ்க்குக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை கண்டித்தும் போராட்டக்காரர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் பெப்ரவரி 17 ஆம் திகதி ஜனாதிபதி நாள் அனுசரிக்கப்படும். இந்த நிலையில், 50501 என்ற இயக்கத்தை சேர்ந்தவர்கள், 'ஜனாதிபதி நாளில் அரசர் வேண்டாம்' என்ற பாதகைகளுடன் நாடு முழுவதும் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.

வொஷிங்டனில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள், கடும் பனிப்பொழிவுக்கு மத்தியில் ட்ரம்புக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

அதேபோல், புளோரிடா மற்றும் கலிபோர்னியா மாகாணங்களிலும் போராட்டம் நடைபெற்றது.

பிறப்பால் குடியுரிமை தடைச் சட்டம் போன்ற ட்ரம்ப்பின் அதிரடி உத்தரவுகளுக்கு எதிராகவும், அரசு செயல்திறன் துறையில் எலோன் மஸ்க்குக்கு முக்கியத்துவம் அளிப்பதை எதிர்த்தும் போராட்டக்காரர்கள் முழக்கமிட்டனர்.

பாஸ்டன் நகரில் பனிப்பொழிவுக்கு மத்தியில் பேரணியாகச் சென்றவர்கள், எலோன் மஸ்க்கை உடனடியாக அரசுத் துறையில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேபோன்ற போராட்டத்தை கடந்த இரு வாரங்களுக்கு முன்னதாக பெப்ரவரி 5 ஆம் திகதி 50501 இயக்கத்தினர் நடத்தினர்.

இந்த நிலையில், அரசு செயல்திறன் துறைக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக மட்டுமே எலோன் மஸ்க் செயல்படுகிறார் எனவும் அவருக்கு முடிவெடுக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றும் வெள்ளை மாளிகை தரப்பில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் திங்கள்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைன் - ரஷ்ய போர் தொடர்பில் சவூதி அரேபியாவில் 4 மணிநேர பேச்சு





உக்ரைனில் இடம்பெற்றுவரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் அமெரிக்க மற்றும் ரஷ்யப் பிரதிநிதிகளுக்கு இடையில் சவூதி அரேபியாவில் நேற்று சுமார் 4 மணிநேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேர்மறையான, ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்ததாக ரஷ்ய பிரதிநிதியொருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ மற்றும் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் பங்கேற்பில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விடுக்கப்படாமையினால் உக்ரைனின் பிரதிநிதிகள் எவரும் அதில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய பேச்சுவார்த்தைகள் ரஷ்யா,போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் தீவிரமாக உள்ளதா என்பதை ஆராய்வதற்கான முதல் படி என அமெரிக்கா கூறுகிறது.

அதேநேரம் இதனூடாக அமெரிக்காவுடனான உறவுகளை இயல்பாக்குவதற்கு முடியும் என நம்புவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதேவேளை, தாம் பங்குபற்றாத பேச்சுவார்த்தைகளிலிருந்து எடுக்கப்படும் எந்தவித தீர்மானங்களையும் அங்கீகரிக்க முடியாது என உக்ரைன் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதனிடையே தேவை ஏற்படின் உக்ரைன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக உள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.02.2025


மேஷம்

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுதல் தவிர்க்க வேண்டும். உங்கள் செயல்களை திட்டமிட்டு ஆற்றுவதன் மூலம் முன்னேற்றம் காணலாம்.

பணியில் உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் மோதல் காணப்படும். பணியிடத்தில் சுமுகமான சூழ்நிலை அமைய பதட்டத்தை கட்டுபடுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். ஈகோ உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க சிக்கனமும் சேமிப்பும் அவசியம்.

நிலையான ஆரோக்கியத்திற்கு உணவில் கவனம் செலுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.


ரிஷபம்

இன்று நம்பிக்கையான போக்கு காணப்படும். இதனால் எளிதில் வெற்றியை அடையலாம். பயனுள்ள முடிவுகள் எடுப்பது உங்களுக்கு இன்று மிகவும் நல்லது.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை உற்சாகமாகவும் எளிதாகவும் செய்வீர்கள். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

பணப்புழக்கம் அதிக அளவு காணப்படும். பணம் சம்பந்தப்பட்ட முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்துங்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.


மிதுனம்

தகவல் பரிமாற்றத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். சிறந்த திட்டமிடல் வேண்டும். உறுதியை வெளிப்படுத்த வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை வேண்டும். உங்கள் முயற்சி அதிக அளவில் இருந்தாலும் அதிக அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் துணையுடன் பேசும் போது நகைச்சுவை அணுகுமுறை கொள்ள வேண்டும்.

அதிக அளவு பணம் தக்க வைத்துக்கொள்ள இந்த நாள் சிறந்த நாளாக இருக்காது. இன்று பற்றாக்குறை காணப்படும் அல்லது உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.


கடகம்

இன்று ஆன்மீக விஷயங்களில் ஆர்வம் வளர்த்துக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் ஆறுதலும் கிடைக்கும். இழந்தது போன்ற உணர்வு காணப்படும்.

பணியில் குறைந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் பணிகளை மேம்படுத்த பயனுள்ள திட்டங்களை தீட்ட வேண்டும். சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

குடும்பப் பிரச்சினை குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள். கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

பண விஷயத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே கவனமாக இருக்கவேண்டும். உங்கள் பணத்தை சாதுர்யமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.


சிம்மம்

தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உங்கள் செயல்களை ஆற்றுவதில் சில தடைகள் காணப்படும். இன்றைய நாளை கவனமுடன் திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற மிகுந்த முயற்சி தேவை. உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் மாறுபடும் மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். நட்பான சகஜமான அணுகுமுறை தேவை.

பணம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் கவலையை ஏற்படுத்தும். தேவையற்ற விஷயங்களுக்கு பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

கால்களில் விறைப்புத் தன்மை காணப்படும்.


கன்னி

இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்கை அடைந்து மகிழ்ச்சி அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் இன்று எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிக்கான சிறந்த பலன்களைக் காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கும்.

உங்கள் உணர்வை நகைச்சுவையாக உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதன் மூலம் உங்கள் அன்பு வெளிப்படும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக காணப்படும்.இன்று சிறந்த முறையில் பணத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் சிறந்த மாற்றம் காண்பீர்கள்.


துலாம்

இன்று உங்கள் விருப்பங்கள் மேம்படும் நாள். சுமுகமான பலன்கள் கிடைக்கும் முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். பயணங்களுக்கான வாய்ப்பு உள்ளது.

பணியைப் பொறுத்த வரை இன்று உற்சாகமான நாள். உங்களின் உழைப்புக்கான ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள் போன்ற பண வரவு காணப்படும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். உங்கள் துணையிடம் அனுசரணையான போக்கை பராமரிக்க வேண்டும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். பண வரவும் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரித்து காணப்படும்.


விருச்சிகம்

இறை வழிபாடு, ஸ்லோகம் மந்திரம் இவற்றின் மூலம் இன்று ஆறுதல் மற்றும் திருப்தி பெறலாம். இன்று உங்கள் செயல்கள் சிறப்பாக இருக்க அவற்றைத் திட்டமிடுங்கள்.

இன்று பணிகளை முறையாக திட்டமிட்டு ஆற்றுவதன் மூலம் நற்பலன்களைப் பெறலாம். உங்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பேச்சு வார்த்தை ஆறுதல் அளிக்கும் வகையில் இருக்காது. உங்கள் இருவருக்கும் இடையே மோதல் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இன்று பணத்தை திட்டமிட்டு பராமரிக்க வேண்டும். செலவினங்கள் அதிகரித்து காணப்படும்.

இன்று காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 19.02.2025




உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள் அல்ல. முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க கூடாது அல்லது தள்ளிப்போட வேண்டும். நேர்மறையான எண்ணங்களைப் பராமரிப்பதன் மூலம் நீங்கள் விரும்பியபடி செயலாற்றலாம்.

கடினமாக உழைத்தாலும் அதற்கான பாராட்டு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும். பணிகள் கடினமாக காணப்படும்.

இன்று உங்கள் மன நிலையைப் பொருத்து உங்கள் செயல்கள் காணப்படும். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் நலம்.

பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன. இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள்.

சளி அல்லது இருமலுக்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி நீங்கள் உங்கள் செயல்களில் வெற்றி பெறலாம். உங்கள் பொறுப்புகளை திறமையாக செய்வதே உங்களின் இன்றைய குறிக்கோளாக இருக்கும்.

பணியில் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் சக பணியார்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமை பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் பரிமாற்றம் கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் துணையின் உணர்வை புரிந்துகொள்வீர்கள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை சௌகரியமாக இருக்கும். உங்கள் நிதியைப் பொறுத்தவரை பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள். பணத்தைத் திறமையுடன் பயன்படுத்துவீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். முக்கியமான முடிவுகள் இன்று பலனளிக்கும். இன்று நீங்கள் பிரகாசிப்பீர்கள்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகள் மற்றும் கீழ் பணி புரிபவர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் காரணமாக இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் பண வளர்ச்சி ஏற்படும்.

மனம் ஸ்திரத்தன்மையுடன் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தைரியமாகவும் துணிவாகவும் இருக்க முயல வேண்டும்.

பணிச்சுமை காரணமாக உங்கள் மேலதிகாரிகள் மற்றும் கீழ் பணிபுரிபவர்களுடன் சில விரும்பத் தாகாத தருணங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் சில அசௌகரியமான உணர்வுகளை எதிர்கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. குடும்ப பொறுப்புகள் காரணமாக செலவுகள் காணப்படும்.

தேவையற்ற கவலைகளுக்கு ஆளாவீர்கள். இதனால் பதற்றமும் தலைவலியும் ஏற்படும்.

# சின்னவேம்பு கிரான் பிரதேசத்தில் நேற்று மருமகன் தாக்கியதில் மாமனார் மரணம்



(கனகராசா சரவணன்)

மகள் மீது தாக்குதல் நடாத்திய மருமகனைத் தட்டிக் கேட்ட மாமனரை மருமகன் பொல்லால் தாக்கியதில் அவர் உயிரிழந்தார். மருமகன் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சின்னவேம்பு கிரான் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னவேம்பு கிரான் பிரதேசத்தைச் சோந்த 66 வயதுடைய பொடி எட்வேட் போஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

இதுபற்றித் தெரியவருவதாவது:-

மெறடி நபரின் மகளுக்கும் மருமகனுக்கும் இடையே நேற்றொ பகல் வாக்குவாதம் ஏற்பட்டது. மகளை மருமகன் தாக்கியமையைக் கண்ட அவர் ஏன் தாக்குகிறாய் என இடையில் புகுந்து கேட்டிருக்கின்றார். அதனால் கோபமுற்ற மருமகன் அவர் தலை மீது பொல்லால் தாக்குதல் நடாத்தியதையடுத்து அவர் படுகாயமடைந்து கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து தாக்குதலை நடாத்தியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்க நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையைத் தாங்கள் முன்னெடுத்துவருகின்றனர் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.